025777

- 5 AUG 2019

சென்னை-600 108

சுருக்கம்

கைத்தறி மற்றும் துணிநூல் துறை – அறிவிப்புகள் 2019–2020 – அறிவிப்பு எண்.3 – பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் நவீன வடிவமைப்புகளை உருவாக்கும் நெசவாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.5,000/–, ரூ.3,000/– மற்றும் ரூ.2,000/– வழங்கப்பட்டு வருவதை முறையே ரூ.10,000/– , ரூ.6,000/– மற்றும் ரூ.4,000/– ஆக உயர்த்தி வழங்க அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை

அரசாணை (நிலை) எண். 112

நாள்: 31.07.2019
விகாரி, ஆடி 15
திருவள்ளுவராண்டு 2050

படிக்கப்பட்டது:–

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க21301/ 2019/ஜே1, நாள் : 18.07.2019.

---

ஆணை:–

தமிழக சட்டமன்றப் பேரவையில் 12.07.2019 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால், 2019–2020–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண் 17, கைத்தறி மற்றும் துணிநூல் தாக்கல் செய்து அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில், அறிவிப்பு எண் 3–ன் விவரம் பின்வருமாறு:–

"பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் நவீன வடிவமைப்புகளை உருவாக்கும் நெசவாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.5,000/–, ரூ.3,000/– மற்றும் ரூ.2,000/– வழங்கப்பட்டு வருவதை முறையே ரூ.10,000/– , ரூ.6,000/– மற்றும் ரூ.4,000/– ஆக உயர்த்தி வழங்க ரூ. 8.00 இலட்சம் நிதி வழங்கப்படும்."

2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில் பருத்தி, பட்டுதுணி வகையில் 20 இரகங்களில் புதிய மற்றும் நவீன வடிவமைப்புகளை உருவாக்கும் நெசவாளர்களுக்கு இரகங்கள் வாரியாக முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.5,000/–, ரூ.3,000/– மற்றும் ரூ.2,000/– வழங்கப்பட்டு வருவதை முறையே ரூ.10,000/– , ரூ.6,000/– மற்றும் ரூ.4,000/– ஆக உயர்த்தி வழங்க ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இவ்வறிவிப்பின் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.4,00,000/– செலவாகும். இத்தொகை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் தமிழ்நாடு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிதியிலிருந்து பெற்று வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

3. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலித்து பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் நவீன வடிவமைப்புகளை உருவாக்கும் நெசவாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.5,000/–, ரூ.3,000/– மற்றும்

ரூ.2,000/- வழங்கப்பட்டு வருவதை முறையே ரூ.10,000/- , ரூ.6,000/- மற்றும் ரூ.4,000/- ஆக உயர்த்தி வழங்க கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3-ல் கண்ட பரிசுத் தொகையை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் செலவினத் தொகை ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்)-ஐ தமிழ்நாடு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிதியிலிருந்து பெற்று வழங்க கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை- 600 108.
மேலாண்மை இயக்குநர், கோ-ஆப்டெக்ஸ், சென்னை -8.
மாநில தலைமைக் கணக்காயர் (A&E), சென்னை-600 018/ (பெயரில்)
மாநில தலைமைக் கணக்காயர் (CA), சென்னை- 600 018 / (பெயரில்)
மாநில கணக்காயர் (CAS), சென்னை-600 009.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை- 600 001 .
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை -108.

<u>நகல் :-</u>
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்)அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை- 600 009.
நிதித் (தொழில்கள்/BPE) துறை, சென்னை-600 009.
அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும்
கதர்த் துறையின் தனிச் செயலர், சென்னை-600 009.
கைத்தறி, கைத்திறன் , துணிநூல் மற்றும் கதர் (எ1/பி1) துறை, சென்னை- 600 009.
இருப்பு கோப்பு /உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
31.7.19